DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No.17 of 2020** |
| **Deposition of witness for** | **:** | **PW- 01** |
| **Name** | **:** | **திரு. ராமசாமி** |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**<u>09.08.2024</u>**

A1, A2, A3 Present.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஜெகொலக்கம்பையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு இரண்டு மகன்கள். இறந்து போனவர் என் மகன். ராமமூர்த்தி, சாட்சி முருகேசன், துளசி, கீதா, தனலக்ஷ்மி ஆகியோர்களை தெரியும். எதிரிகள் என் மருமகள், சித்ராவின் உறவினர்கள். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 17.09.2019-ம் தேதி என் மருமகளுக்கும், மகனுக்கும் சிறிய பிரச்சனைகள் இருந்து வந்தது. என் மகன், என் மருமகளிடம் சண்டை போட்டுக்கொண்டே இருப்பதால் ஆஜர் எதிரிகள்

மூவரும் மைசூரில் இருக்கும் அவரது அம்மா வீடு போவதற்காக எனது மருமகள் சித்ராவை ஊட்டி பேருந்து நிலையத்தில் கொண்டு வந்து விட்டுவிட்டு மாலை 4.30 மணியளவில் ஜெகொலக்கம்பையில் உள்ள எனது வீடு அருகில் இருக்கும் விநாயகர் கோயில் அருகே வந்து என் மகன் பழனிச்சாமியை கட்டையால் அடித்துவிட்டார்கள், நெஞ்சுமேல் நொறுங்க மிதித்துவிட்டார்கள். என் மகன் காதில் இரத்தம் வந்தது. என்னையும் அடித்து விட்டார்கள்.

என் மகன் அடிபட்டவுடன் என்னிடத்தில், என்னை முடிந்தவரை அடித்துவிட்டார்கள் எனக்கு நெஞ்சு வலிக்கிறது. என்னால் உயிரோடு இருக்க முடியாது என்று கூறினார். பின்பு பக்கத்தில் அரசு பள்ளியில் படிக்கும் தன் மகள் கீதாவை பார்த்துவிட்டு, நான் உயிரோடு இருக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டு தோட்டத்திற்கு போனார். தோட்டம் சுமார் 500 மீட்டர் தூரத்தில் இருக்கும். அங்கு போனபோது, நான் பின்னால் சென்றேன். அவருக்கு கை, கால் நடுங்க ஆரம்பித்தது. அங்கு இருந்த மனோகரன், முத்தான், அம்மணி ஆகியோர்களை அவரை பிடிக்குமாறு சொன்னேன். அதற்குள் அவர் மயங்கி விழுந்துவிட்டார். நான், இப்பொழுது தானே என் மகன் வந்தான் நான் பின்னாலே வந்து கொண்டு இருக்கிறேன். என் மகனுக்கு என்ன ஆனது என்று கதறிக்கொண்டே போய் பார்த்தேன். என்ன ஆனது என்று கேட்டேன். என் மகன் விஷம் அருந்திவிட்டதாக

மனோகரனும், முத்தானும் சொன்னார்கள். அங்கிருந்து மனோகரனும், முத்தானும் மனோகரனின் ஜுப்பில் என் மகனை தூக்கிக் கொண்டு ஊட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள். அங்கு கொண்டு சென்றபோது அங்கிருந்த மருத்துவர் சோதித்துவிட்டு, ஏற்கனவே இறந்துவிட்டதாக சொன்னார். பின்பு அருவங்காடு காவல் நிலையம் சென்று நடந்த சம்பவம் குறித்து நான் புகார் கொடுத்தேன். அந்த புகாரை நான் சொல்ல சொல்ல மணிகண்டன் எழுதினார். அந்த புகார் அசாஆ.1 ஆகும்.

சம்பவம் நடந்து 10, 20 நாட்கள் கழித்து நீதித்துறை நடுவர், குன்னூர் அவர்களிடம் சென்று வாக்குமூலம் கொடுத்தேன். 164 – ன் கீழான வாக்குமூலம் சாட்சியிடம் காட்டப்பட்டு, அவருக்கு படிக்க தெரியாது என்பதால் படித்து காண்பிக்கப்பட்டது. அவர் அந்த வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை ஒத்துக்கொண்டார். அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்படி குவிமுச 164– ன் கீழான வாக்குமூலத்தில் உள்ள, நான் விவசாயம் செய்கிறேன் என்று சொன்ன பகுதியிலிருந்து குடித்து இறந்துவிட்டதாக தான் சொல்ல வேண்டும் என்று மிரட்டினார் என்ற பகுதி வரைக்கும் அசாஆ.2 ஆகும். என் மகன் இறப்புக்கு எதிரிகள் அடித்தது தான் காரணம். இதுசம்பந்தமாக ஆயவாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என் மகனுக்கும் அடிப்பட்ட அன்றே நான் ஊட்டி அரசு மருத்துவமனைக்கு போனேன். நான் அன்றைய தினமே காவல்

நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால், நான் அன்றைய தினமே போன் செய்தேன். மறுநாள் காலை காவல்நிலையம் வருமாறு சொன்னார்கள். புகாரை யார் எழுதினார் என்றால் மணிகண்டன் எழுதினார். புகார் காவல் நிலையத்தில் வைத்து தான் எழுதப்பட்டது. முதல் விசாரணையில் சொன்ன அனைத்து விவரங்களையும் புகாரில் சொன்னேன். புகார் படித்து காண்பிக்கப்பட்டது. அது சரியாக இருந்த காரணத்தினால்தான் புகார் கொடுக்கப்பட்டது. நான் காவல் நிலையம் செல்லும்போது என்னுடன் என் மனைவி துளசியம்மாள், என் பேத்தி கீதா, லோகநாதன், முருகேஷ் ஆகியோர் வந்தார்கள்.

நான் புகார் கொடுக்கும்போது எதிரிகள் காவல் நிலையத்தில்தான் இருந்தார்கள். நான் காவல் நிலையத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் 3 மணிநேரம் இருந்தேன். எதிரிகள் காவல் நிலையத்தில் மற்றொரு பகுதியில் இருந்தார்கள் எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்று தெரியாது. என் மகனின் திருமணம் காதல் திருமணம். என் மருமகள் வேறு ஜாதியை சேர்ந்தவள். என் மகன் திருமணத்தில் எனக்கு உடன்பாடு இல்லை என்றால் சரியல்ல. என் மருமகளின் குடும்பத்தார் யாரும் என் மகன் வீட்டிற்கு வரவில்லை என்றால், என் பேத்தி பிறக்கும்வரை யாரும் வரவில்லை. அதன்பிறகு வந்தார்கள். என் மகனுக்கு குடிப்பழக்கம் உள்ளது. என் மருமகளின் பாட்டி

இறப்புக்கு என் மருமகள் சென்று வந்ததால் என் மருமகளை வீட்டிற்குள் வரக்கூடாது என்று என் மகன் சொல்லிவிட்டார் என்றால் ஆம். என் மருமகளை வீட்டிற்குள் வரக்கூடாது என்று என் மகன் தடுத்தார் என்றால் ஆம். அதன் பிறகு என் மருமகள் பக்கத்தில் இருந்த பள்ளி வராண்டாவில் தான் உட்கார்ந்திருந்தார் என்றால் சரியல்ல. என் மகன் பழனிச்சாமி இரவு வரை என் மருமகளை வீட்டிற்குள் விடாத காரணத்தினால்தான் என் மூத்த மகன் முருகேசன் அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. என் மகன், என் மருமகளுடன் தகராறு செய்யும்போது குடிபோதையில் இருந்தார் என்றால் சரியல்ல.

நான் என்னுடைய புகாரிலேயே என் மகன் குடிபோதையில் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால், புகாரில் அவ்வாறு தான் எழுதப்பட்டடுள்ளது. ஆனால் மணிகண்டன் எதிரிகளின் உறவினர் என்பதால் அவ்வாறு வேண்டுமென்றே புகாரில் எழுதியுள்ளார். போலிசார் விசாரணையிலும் என் மகன் குடிபோதையில் இருந்ததாகதான் நான் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை. என்னுடைய புகாரிலோ அல்லது போலீசாரிடம் முதலில் கொடுத்த வாக்குமூலத்திலோ, விநாயகர் கோவில் அருகே வைத்து என் மகனை எதிரிகள் அடித்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நீதித்துறை நடுவரிடம் கொடுத்த

வாக்குமூலத்திலும் விநாயகர் கோவில் அருகில் வைத்து என் மகனை எதிரிகள் அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் விநாயகர் கோவில் அருகே வைத்து என் மகனை எதிரிகள் அடிக்காத காரணத்தினால்தான் நான் என்னுடைய வாக்குமூலத்தில் மற்றும் நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சொல்லாமல், என் மருமகள் சித்ரா கொல்லேகால் செல்வதற்காக காரில் உட்கார்ந்திருந்த அவரை என் மகன் போய் இறங்க சொன்னதாகவும், அதற்கு எதிரிகள் மறுத்துவிட்டதாகவும், அந்த சமயத்தில்தான் என் மகனை எதிரிகள் அடித்துவிட்டதாகவும், சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

என் மகனை கட்டையால் அடித்ததாக புகாரிலோ வாக்குமூலங்களிலோ அல்லது நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னை அடித்ததாக சொல்லி என்னுடைய புகாரிலோ குவிமுச 164 வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் முதல் வாக்குமூலத்தில் இல்லை, பின்புள்ள வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். என் மகன் காதில் இரத்தம் வந்ததாக எந்த வாக்குமூலத்திலும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் என் மகன், என் பேத்தியை பார்த்துவிட்டு, தான் உயிரோடு இருக்க மாட்டேன் தோட்டத்திற்கு போய்விட்டு வருகிறேன் என்று சொன்னதை புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல், எனக்கு முன்னால் போன என் மகன் கை, கால் நடுங்கிவிட்டது என்றும், அவரை மற்ற சாட்சிகளை பிடிக்குமாறு சொன்னதை புகாரிலோ, போலிசாரிடம் சொன்ன வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

முத்தான், அம்மணி ஆகியோர் என் மகன் கீழே விழும் சமயத்தில் இருந்தார்கள் என்று போலிசார் விசாரணையிலோ, புகாரிலோ அல்லது நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் இப்போது தானே வந்தான் என் மகனுக்கு என்ன ஆனது என கதறிக் கொண்டு போய் பார்த்தேன் என்று புகாரிலோ போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மகன் விஷம் அருந்தியதாக மனோகரன் மற்றும் முத்தான் என்னிடத்தில் சொன்னதாக புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் போலிசாரிடம் புகாரிலும், 18.09.2019 அன்று கொடுத்த வாக்குமூலத்திலும் நான்,

என் மகன் பின்னாலேயே போய் பார்த்தபோது எனது மகன் பழனிச்சாமி கேரட்டிற்கு அடிக்கும் மருந்தை எடுத்து குடித்துவிட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மணிகண்டன் புகாரில் தானாக அவ்வாறு எழுதிவிட்டார். போலிசாரும் தாங்களாக அவ்வாறாக எழுதியிருக்கலாம், எனக்கு தெரியாது. போலிசார் பிரேத விசாரணை செய்யும்போது நான் உடனிருந்தேன். மறுநாள் பிரேத பரிசோதனை நடந்த விவரம் எனக்கு தெரியும். என் மகன் மருந்து குடித்துவிட்டதாக சொன்னார்கள், எனக்கு தெரியாது.

3 மாதம் கழித்து ஆய்வாளர் என்னிடத்தில் வந்து என் மகன் விஷம் எதுவும் குடிக்கவில்லை என்றும் என் மகனை அடித்துதான் கொன்றார்கள் என்றும் பிரேத பரிசோதனையில் வந்ததாக சொன்னார்கள். அதன்பிறகுதான் நான், எதிரிகள் என் மகனை அடித்ததாக வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அடித்ததால் என் மகன் இறக்கவில்லை என்றால் சரியல்ல. என் மகன் இறந்தபிறகு என் மருமகள் எங்களுடன் வசிக்கவில்லை என்றால், என் மருமகளை கூப்பிட்டபோது அவர் வர மறுத்துவிட்டார். எதிரிகள் மீது உள்ள விரோதத்தினால் அவர்களுக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விநாயகர் கோயிலுக்கு அருகில் வீடுகள் உள்ளது. அங்கிருந்த மக்கள் அனைவரும் வந்தார்கள்.

**<u>மறு விசாரணை</u>**

எங்கள் ஊரில் ஒரே ஒரு விநாயகர் கோவில் தான் உள்ளது. என் மகனை யார் நெஞ்சில் மிதித்தார்கள் என்றால் மகாதேவன் தான் நெஞ்சில் மிதித்தார். மூன்று பேரும் மிதித்தார்கள். நான் ஏன் என்னை அடித்ததற்காக காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் எனக்கு லேசாக அடிப்பட்டதால் புகார் கொடுக்கவில்லை.

**<u>மறு குறுக்கு விசாரணை</u>**

நான் எனக்கு லேசாக அடிப்பட்டதால் புகார் கொடுக்கவில்லை என்று புகாரிலோ, போலிசார் வாக்குமூலங்களிலோ அல்லது நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. மகாதேவன் மற்றும் மற்ற எதிரிகள் நெஞ்சில் மிதித்ததாக புகாரிலோ அல்லது 18.09.2019 தேதியிட்ட முதல் வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றாலும், 4 மாதம் கழித்து தான் மறு வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

A ABDUL KADHAR

Digitally signed by A ABDUL KADHAR
Date: 2024.08.09 15:31:21 +0530